மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அவர்கள் கேட்கின்ற இடத்தில் ஒரு ஓடை அமைந்திருக்கிறது. அந்த ஓடையைத் தூர்க்க வேண்டும். இல்லையென்றால் வேறு இடமாவது பரிசீலனை செய்து எடுக்க வேண்டும். வேறு இடம் அங்கே இல்லை. எனவே, ஓடையைத் தூர்ப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டும். அதற்குரிய நடவடிக்கையில் ஈடுபடுவதென்றால், அதற்குச் செலவு எவ்வளவு ஆகும், எப்படித் தூர்ப்பது, தூர்ப்பதால் ஏற்படும் நஷ்டம் என்ன, லாபம் என்ன என்பதைப் பற்றிப் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறார்கள். பரிசீலனை முடிவுற்ற பிறகு உடனே நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம்.

மாயூரம் நகர சுத்தித் தொழிலாளர்களுக்குக் குடியிருப்பு.

***715 வினு.—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :—

மாயூரம் நகராட்சியில் பணிபுரியும் நகர சுத்தித் தொழிலாளர்களுக்கென குடியிருப்புக் காலனி அமைத்துக் கொடுக்கும் திட்டம் எந்த அளவுக்கு நிறைவேற்றப்பட்டுள்ளது ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : நகர சுத்தித் தொழிலாளர்களுக்கு வீடு கட்டுவதற்குரிய வீட்டு மனை மாயூரம் நகராட்சி வசம் இல்லை. ஆகவே அரசு உதவித் தொகை அந் நகராட்சிக்கு அளிக்கப்படவில்லை. அரசு புறம்போக்கு நிலத்தை மாயூரம் நகராட்சிக்கு ஜாரி செய்யுமாறு மாயூரம் நகராட்சியின் தனி அதிகாரி, தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியாளரைக் கேட்டுக்கொண்டுள்ளார். நிலம் கிடைத்தவுடன் தான் வீடு கட்டுவதற்குரிய மானியத் தொகை கொடுக்க இயலும்.

திரு. என் கிட்டப்பா : தலைவரவர்களே, மாயூரம் நகராட்சியில் பணிபுரியும் நகர சுத்தித் தொழிலாளர்களுக்குக் குடியிருப்புக் காலனி திட்டத்திற்காக தமிழக அரசு முன்னரே 64,000 ரூபாய் மானியமாக வழங்கியிருந்தும், நகராட்சியில் கட்சித் தகராறு ஏற்பட்டதன் விளைவாக, இடத்தை ஒதுக்குவதில் ஏற்பட்ட தகராறின் விளைவாக, காலனி அமைக்கின்ற சூழ்நிலை இல்லாமலிருக்கிறது. எனவே, நகராட்சி தனி அலுவலர் தருகின்ற திட்டத்தை நிறைவேற்ற அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : மாயூரம் நகராட்சியிலிருக்கின்ற கட்சித் தகராறுகள் பற்றி இங்கே தகவல் எதுவுமில்லை. ஆனால் வருவாய்த் துறையிலே உள்ள பல இடங்களை எடுக்க வேண்டுமென்று அங்கே கேட்டுக்கொண்டார்கள். 934–2, 936 ஆகிய சர்வே எண்கள் உள்ள, வார்டு நெம்பர் 6–ல் இருக்கும் இடங்கள் வேண்டுமென்று வருவாய்த் துறையிடம் அணுகினார்கள். அவர்கள் அதைக் கொடுக்க மறுத்துவிட்டார்கள். பிறகு, 936, 937, 938, 946 என்ற அதே 6–ஆம் நெம்பர் வார்டிலுள்ள இடத்தைக் கொடுக்க வேண்டுமென்று நகராட்சியினர் கேட்டார்கள். அதையும் ரெவின்யூ ஆபீசர் கொடுக்க மறுத்துவிட்டார்கள். நகராட்சிக்குச் சொந்தமான இடம் எதுவுமில்லை. வருவாய்த் துறையில்தான் இருக்கின்றன. அந்த இடங்களை ஒவ்வொன்றாகக் கேட்டுக்கொண்டு வருகிறார்கள். அது மறுக்கப்பட்டு வருகிறது. பிறகு 868–2 என்ற இடத்தைக் கட்டாயம் எடுக்க வேண்டுமென்று நகராட்சியிலே தீர்மானம் போட்டிருக்கிறார்கள். அதற்கு வருவாய்த் துறையினரும் இசைந்திருக்கிறார்கள். அந்த இடம் எடுக்கப்பட்டதும், மானியம் வழங்கப்பட்டு, வீடுகள் கட்டித் தரப்படும் என்று கூறிக்கொள்ளுகின்றேன்.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : தலைவர் அவர்களே, அரிசனங்களுக்கு வீட்டு மனை ஆர்ஜிதம் செய்து கொடுப்பதைப் போல், நகர சுத்தித் தொழிலாளர்களுக்கும் வீட்டு மனை ஆர்ஜிதம் செய்து கொடுக்க அரசாங்கத்தில் திட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இதுவரையில் அவர்களுக்கு வாடகைக்கு வீடுகள் கொடுக்கும் திட்டம்தான் இருக்கிறது. அவர்களுக்குச் சொந்தமாக நில ஆர்ஜிதம் செய்யும் திட்டம் இல்லை. அவர்களெல்லாம் நகராட்சி மன்றங்களைச் சேர்ந்த இடங்களைச் சுற்றிவந்து நகர மக்களுக்குப் பணி செய்யும் தொழிலில் ஈடுபட்டிருப்பதால், அவர்கள் நகரத்திலே வாழ வேண்டுமென்ற நிலை இருக்கிறது. அந்தத் தொழிலில் மாறி மாறி வந்துகொண்டிருக்கிறார்கள். ஒருவருக்கே கொடுத்துவிட்டால், அவர்களுக்கே சொந்தமாகக் கொடுத்துவிட்டால், மற்றபடி வருகிற தொழிலாளர்களுக்கு நகரத்தில் இடம் கொடுப்பது கஷ்டமாகிவிடும். எனவே, நகரத்திலே பணி புரியும் நகர சுத்தித் தொழிலாளர்கள் நகர வட்டாரத்திலே பணி செய்கிறார்கள், அங்கே வீடுகளைக் கட்டி வாடகைக்குக் கொடுக்கும் வகையிலேதான் இப்பொழுது திட்டம் இருக்கிறது.

திரு. எம். பூபதி : தலைவரவர்களே, நமது மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவார்கள், நகர சுத்தித் தொழிலாளர்களின் சம்பளம், பஞ்சப் படி, வீட்டு அலவன்ஸ் குறைந்த அளவாக மூன்று ரூபாய் கொடுக்கிறார்கள் என்று தெரியும். ஆகவே, சர்க்கார் இதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து குறைந்த பட்சம் அவர்களுக்குக் குடியிருப்பு வீடுகளைக் கட்டி இலவசமாகக் கொடுக்க நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : நான் அதைத் தான் சொன்னேன். நாங்கள் அதைப் பற்றிப் பரிசீலனை செய்தோம், அவர்களுக்குச் சொந்தத்திலேயே வீடுகளைக் கொடுக்க வேண்டுமென்று. நகரத்திலே பணி செய்பவர்கள் அவர்கள், குறிப்பிட்ட சில பேர்தான் இருக்கிறார்கள். அவர்கள் ஒருவரே அந்தப் பணியைச் செய்வது கிடையாது. தொடர்ந்து பல பேர் வருகிறார்கள். நகராட்சியில் பணி செய்பவர்களுக்கு, நகராட்சி மூலம் கட்டித் தரும் வீடுகளைச் சொந்தமாகக் கொடுத்துவிட்டால், அடுத்தடுத்து வருபவர்களுக்குக் கொடுக்க முடியாது. அப்படி வருபவர்களுக்கும் நகரத்திலேயே எப்படிக் கொடுப்பது ? அவர்கள் நகரத்திலேயே பணி செய்ய வேண்டியிருப்பவர்கள். ஆகவே, இந்தச் சிக்கல் இருப்பதால் பணி செய்யும் வரையில் வாடகை வீடாகக் கொடுத்து விடலாம் என்றும், ஓய்வு பெற்ற பிறகு, கிராமத்திலே அவர்கள் வாழும் நிலையிருந்தால் அரிசன மக்களுக்குத் தருவதைப் போல், இலவசமாகக் கொடுக்கலாம் என்றும் அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, இன்றைய தினம் நகர சுத்தித் தொழிலாளர்கள் சுத்தமில்லாத இடங்களில், வீட்டு வசதி இல்லாமல் பல இடங்களில் இருக்கிறார்கள். அமைச்சரவர்கள் சொல்லும் பொழுது, வாடகை அடிப்படையில் வீடு கட்டிக் கொடுக்கப் படுவதாகச் சொன்னார்கள். அப்படி எத்தனை நகரசபைகளில் வாடகை அடிப்படையில் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன ? இன்னும் எத்தனை நகரசபைகளில் வீட்டு வசதியில்லாமல் நகர சுத்தித் தொழிலாளர்கள் இருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அந்தத் தகவல் இப்பொழுது இல்லை. தனிக் கேள்வி போட்டால் அடுத்த முறையாவது பதில் சொல்லலாம்.

Family and Child Welfare Projects.

*** 716 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state :**

(*a*) whether the Tamil Nadu Government proposes to extend the family and child welfare programmes to more Panchayat Union Blocks in the State ; and

(*b*) if so, what they are ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : 1968-69-ல் செங்கற்பட்டு மாவட்டம் வில்லிவாக்கம் வளர்ச்சி வட்டாரத்தில் ஒன்றும், தென்னாற்காடு மாவட்டம் குறிஞ்சிப்பாடி வளர்ச்சி வட்டாரத்தில் ஒன்று